## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**OS.No.35/2019**

PW2- இராவணன் நாள்.11.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 25ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

ஜெகநாதன் என்மாமனார் ஆவார். 1ம் பிரதிவாதி தங்கையா என்உடன் பிறந்த அக்கா கணவராவர். என்னை சாட்சி சொல்ல வாதி அழைத்தார். இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். பாகம்பிரித்த பின்னர் யார் யார் எந்த சர்வே எண் கொண்ட சொத்துக்களை அனுபவித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் சர்வேஎண் பற்றிய விவரம் தெரியாது. ஆளுக்குப்பாதி அனுபவித்தார்கள். 1ம் பிரதிவாதி தங்கையாவுக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் ஆதியில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் அப்பா சம்பாதித்த சொத்தாகும். அதை காட்டக்கூடிய ஆவணம் வாதி தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் எந்த தேதியில் யாரிடம் சொத்தை கிரயம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சொத்தை பிளாட் விற்ற விவரம் எனக்கு தெரியும். அதை நான் 1ம் பிரதிவாதி சொல்லி விற்றுகொடுத்தேன். ஆனால், அவர் வாதியின் பங்கை சேர்த்து விற்றுள்ளார். 1ம் பிரதிவாதி கடந்த 2008, 2009ம் ஆண்டுகளில் பிளாட்போட்டு விற்கஆரம்பித்தார். சாட்சிதற்போது 1ம் பிரதிவாதி பிளாட் போடவில்லை என்றும், அவர் இன்னொருத்தருக்கு விற்று அவர் பிளாட் போட்டதாக கூறுகிறார். 1ம் பிரதிவாதி விற்பனை செய்த பொன்னுசாமி பிளாட்போட்டு விற்றார். தாவாசொத்து ஏற்கனவே 1ம் பிரதிவாதி பாகத்திற்கு கிடைத்து அவர் அனுபவம் செய்துவந்தார் என்றும், தாவாசொத்தில் வாதிக்கு உரிமையில்லை என்றும், வாதி என்மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.